**R 2847 (page 232)** தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்

# ஆபிரகாம் மற்றும் லோத்தின் பரீட்சைகள்

## ABRAHAM'S AND LOT'S TESTINGS.

### ஆதியாகமம் 13:1-18

**R2848 : page 234**

லோத் தன் மாமாவைக் காட்டிலும் மிகக்குறைவான விசுவாசம் உடையவராகவும், மிகக்குறைவான குணமுடையவராகவும் காணப்பட்டார்; எனினும் அவர் நல்ல மனிதனாவார்; மேலும் யோர்தான் நாட்டை தன் குடியிருப்பாகத் தெரிந்துகொண்ட இவரது தீர்மானமானது இவர் சோதோமியர்களுடன் ஐக்கியம்கொண்டிருந்தார் என்று குறிப்பதாகாது. மாறாக அந்த ஜனங்களின் நடத்தையானது "நீதியுள்ள அவரது இருதயத்தை வாதித்தது" என்றே பதிவு காணப்படுகின்றது (2 பேதுரு 2:8). இன்றுள்ள அநேகம் கர்த்தருடைய ஜனங்கள் ஏமாறுவதுபோன்று இவரும் உலக ஐசுவரியத்திற்காய்த் தீமையான செல்வாக்குகளுடன் இணைந்திட ஏமாற்றப்பட்டுள்ளார் என்பது உறுதியே. இவர் தன்னால் சோதோமின் தீமைகளினின்று விலகி வாழ்ந்திட முடியும் என்றும், அநீதியானவர்கள்மீது நல்லொழுக்கத்தின் செல்வாக்கினைக்கூடச் செயல்படுத்திட முடியும் என்றும் இவர் இவரையே சாந்தப்படுத்தியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. இவருக்குப் பிற்பாடு சம்பவித்தவைகளின் வெளிச்சத்தில் பார்க்கப்படுகையில், இவரது நடத்தை எத்தனை ஞானமற்றதாகவும், மிகவும் ஞானமற்றதாகவும் காணப்படுகின்றது. இவருக்கு முற்றிலும் வேறுப்பட்ட நிலைமையில் ஆபிரகாமின் ஞானம் காணப்படுகின்றது; மேலும் பரம நகரத்தை நாடிக்கொண்டிருக்கும் மற்றும் உம்முடைய இராஜ்யம் வருவதாக என்று ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கும் அனைவருக்கும், இவ்விருவரின் அனுபவங்களும் விலையேறப்பெற்ற படிப்பினைகளைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. ஆபிரகாமின் நடக்கையானது, "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:33) எனும் நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு உதாரணமாய் இருக்கின்றது. லோத்தின் நடக்கையோ, "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன?" (மாற்கு 8:36) எனும் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு உதாரணமாய் இருக்கின்றது. ஆஸ்தியை லோத்து நாடினபோது, அது ஐசுவரியங்களைக்கொணர்ந்தது; இவர் சோதோமில் ஆஸ்தியுள்ள மற்றும் செல்வாக்குமிக்க மனிதனானார்; ஆனால் இவரது ஆஸ்திக்கும், செல்வாக்கிற்கும் மிக அதிகமான விலையினை இவர் கொடுக்க வேண்டியிருந்தது; முதலாவதாக இவர் மனச்சமாதானத்தினை விலையாகக் கொடுத்து இழந்துபோனார், ஏனெனில் "இவரது நீதியுள்ள இருதயம் வாதிக்கப்பட்டது;" இவருக்கு உண்மையான சந்தோஷம் ஏதுமில்லாதிருந்தது. இரண்டாவதாக இவரது பிள்ளைகளை இவர் விலையாகக் கொடுக்க வேண்டியிருந்தது; பிள்ளைகளில் இருவர் திருமணமாகாமல் இருந்தனர், மேலும் அவர்களும் தீமையான உதாரணங்ளைப் பார்த்துவந்ததின்மூலம் கறைப்பட்டிருந்தனர். இவரது மனைவியையும் இவர் விலையாகக் கொடுக்க வேண்டியிருந்தது; இவள் கர்த்தரிலும், நீதியிலும் கொண்டிருந்த அக்கறையைவிட, தன் பிள்ளைகள்மீது அதிகம் அக்கறை கொண்டிருந்தாள். இன்னுமாக இறுதியில் இவரது மந்தைகள், ஆடுமாடுகள், ஆஸ்திகள் அனைத்தும் விலையாக இவரால் கொடுக்கப்பட்டது; அவை அனைத்தும் பட்டணத்தை அழிக்கும்படிக்கு, பரலோகத்திலிருந்து வந்த நெருப்பில் அழிந்துபோயின.

**R2849 : page 234**

இதில் நம் அனைவருக்கும், அதிலும் விசேஷமாக நீதியை விரும்புகிறவர்களாகவும், பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பைப் பெற்றவர்களாகவும் இருப்பவர்களுக்கு மாபெரும் பாடங்கள் உள்ளன; இவர்கள் பூமிக்குரிய அநுகூலங்கள், சமுதாய காரியங்கள், அரசியல் காரியங்கள் மற்றும் பணக்காரியங்களைக்குறித்துக் குறைவாய்ச் சிந்திக்கின்றவர்களாகவும், மேலும் உலகில் காணப்படும் தீமையினின்று விலகுவதன் வாயிலாக அடையப்பெறும் ஒழுக்க ரீதியிலான, ஆவிக்குரிய ரீதியிலான செல்வாக்குகள் மற்றும் அநுகூலங்கள்/சாதகங்கள்குறித்து அதிகமதிகமாய்ச் சிந்திக்கின்றவர்களாகவும் காணப்பட வேண்டும் - கூடுமானமட்டும் "(பாவத்தின் களங்கத்தினால்) முடமாயிருக்கிறது (நீதியின் பாதையினின்று) பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்" (எபிரெயர் 12:13).